# Gap Inc.

# விற்பனையாளர் ஒப்பந்த விதிகள்

இந்த விற்பனையாளர் ஒப்பந்த விதியானது Gap Inc. அல்லது அதன் அனைத்து துணை நிறுவனங்கள், பிரிவுகள், இணை நிறுவனங்கள் அல்லது முகமைகள் ஆகியவற்றுக்காக பொருட்களை உற்பத்தி செய்யும் அனைத்து தொழிற்சாலைகளுக்கும் பொருந்துவதாகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் செயல்படும்போது அந்தந்த நாடுகளுக்கு ஏற்ற வித்தியாசமான சட்டம் மற்றும் கலாச்சார சூழல்களை தொழில்வளாகங்கள் எதிர்கொள்கின்றன என்பதை Gap Inc. புரிந்து கொண்டுள்ளது. எனினும் Gap Inc-உடன் இணைந்து வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அனைத்து தொழில்வளாகங்களும் கடைபிடிக்க வேண்டிய அடிப்படைத் தேவைகளை இந்த ஒப்பந்த விதி முன்வைக்கின்றது. இந்த விதிகள் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ஐ.எல்.ஓ) அடிப்படை ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் ஆகியவற்றை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிலாளர் தர மதிப்பீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. தொழில்வளாகத்தின் வேலைவாய்ப்பு நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கேற்ப இசைந்து நடத்தல் ஆகியவற்றை தொடர்ந்து மதிப்பீடு செய்கின்ற Gap Inc-க்கு தேவையான அடித்தளத்தை இந்த விதிகள் வழங்குகின்றன.

## I. சட்டங்களைப் பின்பற்றுதல்

Gap Inc நிறுவனத்துக்காக பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்வளாகங்கள் தங்கள் நாடுகளில் அமலில் உள்ள சட்டங்கள் மற்றும் ஏற்புடைய பிற சட்டங்கள், விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை முழுமையாகப் பின்பற்றி செயல்பட வேண்டும். Gap Inc. உடன் வர்த்தகம் செய்வதற்கான ஒரு நிபந்தனையாக ஒவ்வொரு விற்பனையாளரும் இந்த விற்பனையாளர் ஒப்பந்த விதிகளை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும். இந்த விதிகளை விற்பனையாளர்கள் கடைபிடித்து அதன்படி நடக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் மதிப்பீடு செய்யவும் தேவையான மதிப்பீடு முறைகளையும் நிவாரண அமைப்புகளையும் Gap Inc. தொடர்ந்து உருவாக்கும். Gap Inc. நிறுவனத்தின் விற்பனையாளர் ஒப்பந்த விதிகளுக்கும் (சி.ஓ.வி.சி) உள்ளூர் சட்டத்தின்படியான நிபந்தனைகளுக்கும் இடையில் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால், இவற்றில் எது கடுமையான விதியோ அதுவே செல்லுபடியாகும். சரக்குகளை உற்பத்தி செய்ய விற்பனையாளர் மற்றும் விற்பனையாளரின் இணையாளர்கள் Gap Inc. அங்கீகரித்த தொழில்வளாகங்களையே பயன்படுத்த வேண்டும். விற்பனையாளர்கள் உற்பத்தியை தொடங்குவதற்கு முன்பே Gap Inc. நிறுவனத்திடம் இருந்து எழுத்துப்பூர்வமான அனுமதியை பெற வேண்டும்.

## II. சுற்றுச்சூழல்

தொழில்வளாகங்கள் பொருந்தி வரக்கூடிய அனைத்து சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தொழில்வளாகங்கள் பல்வேறு அம்சங்களின் மீது தாங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை அவர்களாகவே எதிர்கொண்டு சமாளித்துக் கொள்ள வேண்டும். எரிபொருள் & பசுமை இல்ல வாயுக்களின் (ஜி.ஹெச்.ஜி) வெளியேற்றம் உள்ளிட்ட சுற்றுச்சூழல், காற்று மாசுபடுதல் (காற்றில் மாசு வெளியேற்றம்), தண்ணீரின் உபயோகம், தண்ணீரின் தரம், கழிவுநீர், கழிவுகளை திசைதிருப்பி விடுதல் மற்றும் அகற்றுதல், வேதிப்பொருட்களின் பயன்பாடு மற்றும் அவற்றைக் கையாளும் முறை போன்றவை தொடர்பான தாக்கங்களை தொழிற்சாலைகள் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

## III. தொழிலாளர்

### A. குழந்தைத் தொழிலாளர்

தேவைப்படும் குறைந்தபட்ச சட்டப்பூர்வ வயது அல்லது குறைந்தபட்சம் 15 வயது, இவற்றில் எது அதிகமானதோ அதைப் பூர்த்தி செய்யும் தொழிலாளர்களை மட்டுமே தொழில்வளாகங்கள் பணியில் அமர்த்த வேண்டும். பொருந்திவரக் கூடிய பிற குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள் அனைத்தையும் தொழில்வளாகங்கள் பின்பற்ற வேண்டும். தொழில்வளாகங்கள் தங்களுடைய பணியாளர்கள், கல்வி கற்கும் பலனை பெறுவதற்காக சட்டப்பூர்வமான பணியிட தொழிற் பயிற்சித் திட்டங்களை வகுத்து செயல்படுத்த ஊக்கப்படுத்தப்படுகின்றன. அதே சமயம் கல்வித் திட்டத்தில் Gap Inc. -வின் 15 வயது என்ற குறைந்தபட்ச வயது நிபந்தனை மற்றும் குறைந்தபட்ச சட்டப்பூர்வ வயது நிபந்தனை ஆகிய இரண்டையும் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.

### B. வெளிநாட்டு ஒப்பந்தத் தொழிலாளர்

வெளிநாட்டு ஒப்பந்தப் பணியாளர்களை (எ.ஃப்.சி.டபிள்யூ) சேர்க்கும் அல்லது பணியில் அமர்த்தும் தொழில்வளாகங்கள் அவர்களை நியாயமாகவும் உள்ளூர் தொழிலாளர்களுக்கு சமமாகவும் நடத்த வேண்டும். இடம் பெயரும் தொழிலாளர்களை வலுக்கட்டாயமாக, திணிப்பாக, கொத்தடிமையாக அல்லது பிணையாக வேலை செய்ய நிர்பந்தம் செய்யக் கூடாது. அனைத்து வேலைகளும் தன்னார்வ முறையில் செய்யப்பட வேண்டும். தொழிலாளர்கள் எந்த நேரத்திலும் தங்களது வேலை ஒப்பந்தத்தை அபராதம் ஏதும் இல்லாமல் ரத்து செய்து கொள்ளக்கூடிய உரிமையை பெற்றிருக்க வேண்டும். இடம் பெயரும் தொழிலாளர்களை (அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள்) கண்டனத்துடன் அச்சுறுத்தல் கூடாது. வலுக்கட்டாயமாக வேலை செய்வதற்கு வலியுறுத்துதல், எந்த நேரத்திலும் தங்களது வேலையில் இருந்து தாங்களாகவே விலகிக் கொள்ள முயலும் தொழிலாளர்களைத் தடுத்தல் போன்ற செயல்களைச் செய்யக் கூடாது.

### C. பாகுபாடு

தொழில்வளாகங்கள் தொழிலாளர்களை தனிப்பட்ட குணங்கள் அல்லது நம்பிக்கைகளின் அடிப்படையில் பணியில் அமர்த்தாமல் அப்பணியை செய்யக் கூடிய அவர்களது திறமையின் அடிப்படையில் பணியில் அமர்த்த வேண்டும்.

### D. கட்டாயமாக பணியில் அமர்த்தல்

விருப்பம் இல்லாத எந்தவகையான தொழிலாளர்களையும் தொழில்வளாகங்கள் வேலையில் ஈடுபடுத்தக் கூடாது. சிறைத் தொழிலாளர், கடன் வாங்கியதால் கொத்தடிமையானவர், அடிமைத் தொழில் செய்பவர் அல்லது திணிக்கப்படும் தொழிலை செய்பவர் என அரசாங்கம் வரையறை செய்துள்ளவர்களை வேலைக்கு பயன்படுத்தக் கூடாது.

### E. தொழிற்சங்கங்களில் சேர்வதற்கான சுதந்திரம்

தொழிலாளர்கள் தங்களின் விருப்பத்துக்கேற்ப தேர்ந்தெடுக்கும் தொழிற்சங்கங்களில் உறுப்பினராக சேர்ந்துக் கொள்ள தடையேதும் இல்லை. சட்டப்பூர்வமாகவும் அமைதியாகவும் ஒன்று சேரவும் ஒருங்கிணைக்கவும் கூட்டாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபடவும் விரும்புகின்ற தொழிலாளர்களை தொழில்வளாகங்கள் தடுக்கக் கூடாது. இத்தகைய செயல்களில் ஈடுபடலாமா வேண்டாமா என்பதை தொழிலாளர்கள் தாங்களாகவே முடிவு செய்ய வேண்டும்.

### F. மனிதநேய அணுகுமுறை

தொழில்வளாகங்கள் அனைத்துத் தொழிலாளர்களையும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும். தொழில்வளாகங்கள் உடல்ரீதியான தண்டனையை தொழிலாளர்களுக்கு அளிக்கக் கூடாது. அல்லது பிற வகை உடல் சார்ந்த அல்லது உள்ளம் சார்ந்த திணிப்புகளை மேற்கொள்ளக் கூடாது.

### G. ஊதியம் & பலன்கள் மற்றும் வேலைக்கான நிபந்தனைகள்

பொருந்தி வரும் சட்டங்களுக்கு ஏற்ப ஊதியங்கள் மற்றும் கூடுதல் நேரப் பணிக்கான ஊதியங்களை தொழில்வளாகங்கள் வழங்க வேண்டும். குறைந்தபட்ச சட்டப் பூர்வமான ஊதியம் அல்லது உள்ளூர் தொழிற்துறை நிர்ணயங்களுக்கு சமமான ஊதியம், இவற்றில் எது அதிகமோ அதனை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும். தொழிலாளர்களின அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய அளவில் ஊதியங்களையும் பலன்களையும் தொழிலாளர்களின் சுய விருப்பத்துக்கேற்ற வருமானத்தையும் வழங்குமாறு தொழில்வளாகங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

### H. பணி நேரம்

பொருந்தி வரக்கூடிய அனைத்து சட்டங்களுக்கும் ஏற்ப பணி நேரங்களை தொழில்வளாகங்கள் நிர்ணயிக்க வேண்டும். ஆயத்த ஆடை உற்பத்தித் தொழிலில் கூடுதல் வேலை நேரம் என்பது தவிர்க்க முடியாத தேவை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அதே சமயம் மனிதநேயம் மற்றும் உற்பத்தி நிலைமைகளை கவனத்தில் கொண்டு இந்தக் கூடுதல் நேரமென்பது ஒரு எல்லைக்குள் இருப்பதாக தொழில்வளாகங்கள் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

## IV. பணியிடச் சூழல்கள்

### A. தொழில்சார்ந்த உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

பணியிடச் சூழல் சார்பாக பொருந்திவரக் கூடிய அனைத்துச் சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளை தொழில்வளாகங்கள் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடச் சூழலை அளிக்க வேண்டும்.

### B. தங்குமிட வசதி (பொருந்தி வருமானால்)

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருகின்ற தொழில்வளாகங்கள் அவற்றை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பராமரிக்க வேண்டும்.

## V. மேலாண்மை அமைப்புகள்

பொருந்திவரக் கூடிய சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் சிஓவிசி ஆகியவற்றுக்கு ஏற்றதாக செயல்பாடுகள் இருப்பதை உறுதி செய்யும் வகையில் பொருத்தமான இயக்குதல் கட்டுப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்ட நீடித்த நிலையான மேலாண்மை அமைப்புகளை தொழில்வளாகங்கள் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும்.

GAP BANANA REPUBLIC OLD NAVY ATHLETA